
# கலைஞரின் மகத்தான மருத்துவத் தொண்டு!



கலைஞரின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு பல்வேறு புதிய நலத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது தமிழ்நாடு அரசு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப் பின்படி சென்னை கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் பதினைந்தே மாதங்களில் ரூ.230 கோடி மதிப்பீட்டில், 1000 படுக்கை வசதிகளுடன் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இம்மருத்துவமனை 15.06.2023 அன்று திறக்கப்பட்டு ஏழை எளியோருக்கும் உயர்தரச் சிகிச்சை கிடைக்கும் வண்ணம் அர்ப் பணிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் துறையில் பெரும் புரட்சிகளைக் கொண்டுவந்த கலைஞர் அவர்களின் பெயரினை இம்மருத்துவமனைக்குச் சூட்டியிருப்பது மிகவும் பொருத்தமானது.

சுகாதாரத் துறையில் தமிழ்நாடு மிகுந்த தொலைநோக்குப் பார்வையோடு செயல்பட்டி ருக்கிறது என்று அறிஞர்கள் பாராட்டுவதற்கும், பொது மருத்துவத்தில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதற்கும் வித்திட்டவர் கலைஞர். தமிழர்களின் நலன் காக்க அவர் என்னவெல்லாம் செய் திருக்கிறார் என்று பார்க்கலாம்.

மருத்துவக் கட்டமைப்பு பலமாக இல்லாத சென்ற நூற்றாண்டில் சிசு மரணம் மிக மோசமான சமூக அவலமாகத் தொடர்ந்துவந்தது. இதைத் தடுப்பதற்கென வெவ்வேறு நடவடிக்கைகளை கலைஞர் முன்னெடுத்தார். சிசு மரணம் ஏற்படுவதற்கான மிக முக்கியமான காரணம் வீட்டிலேயே பிரசவம் பார்க்கும் வழக்கம்தான். இதற்கு எதிரான பிரச்சாரங்கள் ஒருபுறம் மேற்கொள்ளப் பட்டது என்றாலும், வீட்டுக்கே சென்று பிரசவம் பார்க்கும் முடிவை அரசு எடுத்தது. இதற்காக, வீட்டுக்குச் சென்று பிரசவம் பார்க்கும் செவிலியருக்கு ஊக்கத்தொகை அறிவித்தார். அதாவது, ஒவ்வொரு பிரசவத்துக்கும் ஊக்கத்தொகை உண்டு. இதோடு, சிசு மரணம் ஏதும் ஏற்படாமல் சிறப்பாகக் கையாளும் செவிலியருக்கு ஒரு சவரன் தங்கம் பரிசு என்றும் அறிவித்தார். ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் தொடங்கி மாவட்ட ஆட்சியர் வரை சிறப்பாகச் செயல்பட்ட அனைவருக்கும் சுழல் கேடயம் வழங்கி ஊக்கப் படுத்தினார். பிறகு, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதன் வழியாக, பெண்கள் ஊட்டச்சத்துமிக்க உணவு எடுத்துக்கொள்ளவும் உடல்நலனை மேம்படுத்திக் கொள்ளவும் நிதியுதவி அளித்தார். பெண்களும் குழந்தைகளும் இதனால் பயன்பெற்றனர்.

தேசிய சுகாதாரக் குறியீடுகளில் இந்திய அளவில் தமிழ்நாடே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இன்று இந்தக் கட்டமைப்பின் பலனை ஒட்டுமொத்த தமிழ்நாடும் அனுபவித்துவருகிறது. குழந்தைகளுக்குச் சத்தான உணவுகளையும் ஊட்டச்சத்து மாத்திரைகளையும் வழங்குவது, கர்ப்பிணிப் பெண்களுக்கு முதன்மை சுகாதார உதவிகளைச் செய்வது, இளம்பெண்களுக்கு சானிட்டரி நாப்கின்கள் வழங்குவது, 19 வயது வரை உள்ள வளரிளம் பெண்களின் வளர்ச்சியைக் கண்காணிப்பது, கருவுற்ற தாய்மார்களைப் பதிவுசெய்து அவர்களைத் தொடர்ந்து கவனித்துக்கொள்வது, பாலூட்டும் தாய்மார்களுக்கு இணை உணவு வழங்குவது, தாய்சேய் நல அட்டைகள் வழங்குவது, பிரசவம் பார்ப்பது, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்வது, பிறப்பையும் இறப்பையும் உடனடியாகப் பதிவு செய்வது, அரசின் பல்வேறு திட்டங்களையும் மக்களிடம் கொண்டுசேர்ப்பது என ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணி மிகப் பெரியது. கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில்கூட நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல் மலைக்கிராமம் போன்ற பின்தங்கிய இடங்களிலும் நம் மருத்துவத் துறை சிறப்பாகச் செயல்பட்டதற்கு நம்முடைய கட்டமைப்பே காரணம். இதன் கட்டுமானத்தை வலுப்படுத்தியதில் கலைஞருக்குத் தனித்த இடம் உண்டு. கலைஞர் முதன்முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது இருந்த ஆரம்ப சுகாதாரங்களின் எண்ணிக்கை வெறும் 300 மட்டுமே. அதை ஆயிரக்கணக்கில் உயர்த்தினார் கலைஞர். இங்கெல்லாம் 24 மணி நேரமும் மருத்துவ உதவி கிடைக்கும்படி செய்தார்.

பெரும்பாலான மாநிலங்களில் மருத்துவத் துறை என்ற கட்டமைப்பு மட்டும் இருந்துவரும் நிலையில் இங்கே மாவட்ட அளவில் தலைமை மருத்துவமனை, வட்ட அளவில் மருத்துவமனை, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 24 மணி நேரமும் இயங்கும் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிராமங்களை ஒருங்கிணைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிராம வாரியாகத் துணை சுகாதார நிலையங்கள் என அபாரமான மருத்துவ உட்கட்டமைப்பைத் தமிழ்நாட்டில் உருவாக்கினார். இன்று, பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டம் குறைந்த வருவாய் கொண்ட குடும்பத்தினருக்கு சுகாதாரக் காப்பீடு வழங்குகிறது. இந்தக் காப்பீட்டுத் திட்டத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடுதான் முதல் இடம் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம் நம்முடைய மகத்தான மருத்துவக் கட்டமைப்புதான்.

பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டம் எனும் காப்பீட்டுத் திட்டம் 2018 ஆம் ஆண்டின் இறுதியில்தான் ஆரம்பிக்கப்பட்டது. இதை 10 ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைப்படுத்திய மாநிலம் தமிழ்நாடு. சிந்தித்தவர் கலைஞர். 2009 ஆம் ஆண்டில் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கினார். இந்தத் திட்டத்தில் உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கு ரூ.1 லட்சம் வரை காப்பீடு வழங்கப்பட்டது. 1 கோடி ஏழைக் குடும்பங்கள் உயிர் காக்கும் உயர்தர மருத்துவ சிகிச்சை பெற உதவியது. இன்று, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டமாக இது புதிய பரிணாமம் பெற்றிருக்கிறது. இந்தத் திட்டத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கான சிகிச்சை முறை உட்பட 1,090 சிகிச்சை முறைகளும், 8 தொடர் சிகிச்சை வழிமுறைகளும், 52 பரிசோதனை முறைகளும் அடக்கம். பச்சிளம் குழந்தைகளிலிருந்து முதியோர் வரை 1.37 கோடிக்கும் மேற்பட்டவர்கள் பயன்பெறத்தக்க வகையில் வடிவமைக்கப்பட்ட திட்டம் இது. இதற்காக, 800 அரசு மருத்துவமனைகளும், 900 தனியார் மருத்துவமனைகளும் அங்கீகரிக் கப்பட்டு ள்ளன. இந்தத் திட்டத்தின்படி ஆண்டுக்கு ரூ. 5 லட்சம்வரை கட்டணமின்றி, அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெற முடியும்.

1973ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் கண்ணொளித் திட்டம் கொண்டுவந்தார். கண் பிரச்சினைகளுக்குச் சிகிச்சை பெறுவது என்பது எளியவர்களைப் பொறுத்தவரை எட்டாக்கனியாகவே இருந்துவந்த காலத்தில், கட்டணம் ஏதுமின்றி ஏழை மக்கள் தங்களுடைய கண்பார்வைக் குறைபாடுகளுக்கு சிகிச்சை பெறும் வாய்ப்பை இந்தத் திட்டம் வழங்கியது. இதேபோல், முதன்முதலில் இலவசக் கண் சிகிச்சை முகாம் அமைத்துப் பல்லாயிரக்கணக்கானோர் பயன்பெறக் காரணமாக இருந்தவர் கலைஞர்தான். இந்த வழியில், பள்ளி மாணவர்களின் வளம் பேண வாழ்வொளித் திட்டம் வகுத்தார். இதன்படி 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு, அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டது.

செவித்திறன் குறைபாடுடைய குழந்தைகளுக்கு இந்தியாவிலேயே முதன்முறையாக Cochlear Implant அறுவைச் சிகிச்சைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவரும் கலைஞரே. லட்சங்களில் செலவுபிடிக்கும் இந்த சிகிச்சை ஆயிரக்கணக்கான ஏழைக் குழந்தைகளுக்கும் கிடைக்க வழிவகுத்தது; இத்திட்டத்தினை உலக சுகாதார நிறுவனமே வியந்து பாராட்டியது.

நிர்வாக வசதிக்காகப் புதிய மாவட்டங்கள் பிரிக்கப்படும்போது, அந்த மாவட்டங்களிலும் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளையும் தாலுகா அரசு மருத்துவமனைகளையும் அமைத்தார் கலைஞர். ஒன்றிய அரசுடன் இணைந்து கலைஞர் கொண்டுவந்த 108 ஆம்புலன்ஸ் திட்டம் ஒரு நல்வாய்ப்பாய் அமைந்தது. அவசர காலத்தில் லட்சக்கணக்கானவர்களுக்குப் பயன்படும் திட்டமாக இது மலர்ந்தது. மாவட்டத்துக்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற இலக்குடன் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க வழிவகுத்தார். இன்று அந்த இலக்கு எட்டப்பட்டு முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. சென்னை அரசுப் பொது மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டித்தந்தார். வருமுன் காப்போம் திட்டம், நலமான தமிழகம் திட்டம் என்பன போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் வழியாகப் பயன்பெற்றவர்கள் ஏராளம். மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரப் பணியாளர்கள் பணிபுரியும் இடங்களில் அவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய தனிச்சட்டத்தையும் அவர் இயற்றினார். நோயுற்றவர்களின் நலன் மட்டுமின்றி அவர்களைக் காக்கும் மருத்துவர்களின் நலனையும் காத்திட்ட மனித நேயப் பண்பாளர் கலைஞர்.

எந்த நேரத்திலும் மருத்துவ உதவி என்ற உயரிய எண்ணம், சிகிச்சை பெற வேண்டி யாரும் தாங்கள் வாழும் இடத்திலிருந்து அதிக தூரம் பயணிக்கக் கூடாது என்ற அக்கறை, அதிகம் செலவு பிடிக்கக்கூடிய சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாமல் எளியவர்கள் யாரும் துவண்டுவிடக் கூடாது என்ற கரிசனம், நோய்நொடியற்ற வலுவான அடுத்த தலைமுறை உருவாக வேண்டும் என்ற கனவு இவை எல்லாம்தான் கலைஞர் கொண்டுவந்த மகத்தான நலத் திட்டங்கள் சொல்லும் செய்தி.

இன்று அவரின் பெயரைத் தாங்கியிருக்கும் மருத்துவமனையோ எல்லாத் தரப்பினருக்கும் உயர்தர சிகிச்சை தருவதற்காக உருவாகியிருக்கிறது. இருதயவியல், நரம்பியல், புற்றுநோய், குடல் இரைப்பை, சிறுநீரகம், ரத்தநாளம், மூளை ரத்தநாளக் கதிரியல் உள்ளிட்ட 12 உயர் சிறப்புத் துறைகளையும் நவீன சிகிச்சை வசதிகளையும் கொண்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை, நம் மருத்துவத் தலைநகருக்கு சூட்டப்பட்ட மகத்தான மகுடம்!

# முத்திரைத் திட்டங்கள்: முதல்வர் பேச்சு...

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒரு திட்டத்தின் வெற்றிக்கு பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பு மிகவும் அவசியம். அத்தகைய ஒருங்கிணைப் பினை உறுதி செய்ய இது போன்ற ஆய்வுக் கூட்டங்கள் உங்களைப் போன்ற அரசின் உயர் அலுவலர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது என்பது விரைந்து முடிக்கப்பட்ட திட்டங்களின் மூலம் அறிய முடிகிறது. அதே சமயத்தில், இந்த ஆய்வுக் கூட்டத்தின் மூலம் இன்னும் சில திட்டங்களின் முன்னேற்றம் தொய்வாக உள்ளது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**பருவ மழையும் - தேர்தல் நடத்தை விதிமுறைகளும்!**

இத்திட்டங்கள் விரைந்து முடிக்கப்படாவிட்டால் அவற்றின் முன்னேற்றம் மிக விரைவில் வரவிருக்கின்ற பருவமழை போன்ற இயற்கை இடர்ப்பாடுகளினால் மிகவும் பாதிக்கப்படும் என்பதை நீங்கள் அறிவீர்கள். பருவமழை தாண்டிய பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தாலும், அடுத்து வரப் போகின்ற நாடாளுமன்ற தேர்தலுக்கான நடத்தை விதிகள் போன்ற சூழ்நிலைகளால் பணிகளின் முன்னேற்றம் மிகவும் பாதிக்கப்படக் கூடிய நிலை உள்ளது.

எனவே, ஏற்கெனவே தலைமைச் செயலாளர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, உங்களுக்கு திட்டங்களை விரைந்து முடிக்க வரவிருக்கின்ற நான்கு, ஐந்து மாதங்களே வாய்ப்பான காலமாக உங்களுக்கு உள்ளது என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இல்லை. ஆகவே, சரியான திட்டமிடுதலுடனும், உரிய வழிகாட்டுதலுடனும் திட்டங்களை நீங்கள் அணுகினால், வரவிருக்கின்ற நான்கு, ஐந்து மாதங்கள் மாநிலத்தினுடைய பொற்கால வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட வலுவான காலங்களாக மாறும் என்பது உறுதி.

கவனம் செலுத்தப்பட வேண்டிய திட்டங்களாக நாம் விவாதித்த திட்டங்களை முடிப்பதற்கு தேவைப்படும் நிதி உதவி மற்றும் பிற துறைகளின் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை விரைந்து பெற்று, சம்மந்தப்பட்ட துறைச் செயலாளர்கள் உரிய கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பணிகளை முடிவுற்று, தொடக்க விழா நடைபெறும் என நீங்கள் உறுதியளித்துள்ள நாட்களில், தவறாது இத்திட்டங்களை தொடங்கி மக்கள் பயன்பாட்டிற்கு வருவதை உறுதி செய்ய வேண்டுமென உங்களை நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, இன்னும் இரண்டு மாதங்கள் கழித்து இதே போன்ற ஆய்வுக் கூட்டத்தில் உங்களை நான் சந்திக்கின்ற பொழுது, விவாதித்த பெரும்பாலான திட்டங்களில், சிறப்பான முன்னேற்றம் காணப்படும் என்றும், மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு விடும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் உங்களிடமிருந்து இந்த அளவில் நான் விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், சுற்றுலாத் துறை அமைச்சர்

கா. ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணி யன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, அரசு துறைச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள

# வணிகவரித் துறை அலுவலகத்தில் ‘அழைப்பு மையம்’

## அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 17-

வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி நேற்று (16.06.2023) சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரித்துறை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அழைப்பு மையத்தை (Call Center) திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி வணிகவரித்துறை,வரி நிர்வாகத்தில் தொடர்ந்து புதுமையான மற்றும் அறிவியல் பூர்வமான உத்திகளைப் பயன்படுத்தியும் வணிகர்களிடையே வரி செலுத்துவதில் தன்னார்வ இணக்கத்தை ஊக்குவித்தும் அரசுக்கு வருவாய் ஈட்டுவதில் முன்னோடித் துறையாக வணிகவரித்துறை விளங்கி வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி மற்றும் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்று வதற்கு மிக உறுதுணையாக இத்துறை தன்னை இனங்காட்டிக் கொண்டுள்ளது.

வணிகவரித்துறையில் தற்பொழுது 11 லட்சம் வணிகர்கள் முறையாக நமூனாக்கள் (Monthly Returns) தாக்கல் செய்து, உரிய வரியை செலுத்தி வருகின்றனர்.

சில வணிகர்கள் உரிய நேரத்தில் நமூனாக்கள் தாக்கல் செய்யாமலும், செலுத்த வேண்டிய வரியை செலுத்தாமலும் இருக்கும் நிலை தொடர்கிறது.

இதனை நேர் செய்யும் வகையில், ரூபாய் 1.80 கோடி மதிப்பீட்டில் 40 பணியாளர்களைக் கொண்டு இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அழைப்பு மையம் (கால் சென்டர்) அமைச்சர் அவர்களால் நேற்று திறந்து வைக்கப் பட்டது.

இந்த அழைப்பு மையத்தின் பணியாளர்கள், நமூனாக்கள் தாக்கல் செய்யாத மற்றும் வரி செலுத்தாத வணிகர்களை தொடர்ந்து கண்காணித்து, தரவுகளை ஆய்வு செய்து, அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, விரைந்து நமூனாக்கள் தாக்கல் செய்வதோடு, உரிய வரியையும் செலுத்துமாறு அறிவுறுத்துவார்கள்.

வணிகர்களிடம் பெறப்படும் பதில்கள் அழைப்பு மையத்தின் மென்பொருள் மூலம் மின்னஞ்சல் வழியே உரிய வரி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு, மேல் அதிகாரிகளின் ஆய்வுக்காக தரவுகள் பகிரப்படும்.

இந்தத் திட்டத்தின் மூலம் அரசுக்கு வர வேண்டிய வருவாய் இந்த நிதியாண்டில் கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, அரசு முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தீரஜ்குமார், கூடுதல்ஆணை யர் நிர்வாகம் திருமதி வி.ஆர். சுப்புலட்சுமி மற்றும் வணிகவரி உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடுகள்

# பா.ஜ.க.வின் எதேச்சதிகாரத்தின் வெளிப்பாடே!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் வலைதளப் பதிவு!



சென்னை. ஜூன் 17 -

தமிழ்நாட்டில் இருக்கும் பா.ஜ.க. ஆளுநர், அரசியல் நோக்கத்துடன் தன்னிடம் இல்லாத அதிகா ரத்தை முயற்சித்து மூக்கை உடைத்துக் கொண்டிருக்கிறார் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் விமர்சித் துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பால கிருஷ்ணன் தனது ட்விட்டர் பக்கத்தில், “அமைச்சர்களின் துறைகளை தீர்மானிப்பதும், மாற்றுவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரின் தனிப்பட்ட அதிகாரம். இதில் ஆளுநரின் ஒப்புதலுக்கான அவசியமே இல்லை.

துறை மாற்றம் பற்றிய தகவலை ஆளுநருக்கு தெரிவிப்பது ஜனநாயக மரபின் வெளிப்பாடு. பா.ஜ.க. ஆளுநரோ, அரசியல் நோக்கத்துடன் தன்னிடம் இல்லாத அதிகாரத்தை முயற்சித்து மூக்கை உடைத்துக் கொண்டிருக்கிறார். இந்தமுறை அவரால் தமிழ்நாட்டில் அரங்கேற்றும் நாடகம் இங்கேதான் முதல் முறை அரங்கேறுவதல்ல. பா.ஜ.க. வின் எதேச்சதிகார நோக்கத்தின் வெளிப்பாடு. ஏற்கனவே கேரளத்திலும் முயற்சித்து அம்பலப்பட்டு அடிபட்டது.

தமிழ்நாட்டு மக்களும் தக்க பாடம் புகட்டுவார்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பு நெருக்கடியை உருவாக்க முயற்சிக்கிறார் ஆளுநர்!

# தமிழ்நாடு அமைதி கொள்ளாது! எச்சரிக்கை!

## இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் ஆர்.முத்தரசன் அறிக்கை!

சென்னை, ஜூன் 17-

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர்.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பா.ஜ.க. ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை தமிழ்நாடு அரசை குறிவைத்து தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த சில வாரங்களாக அமைச்சர் வி.செந்தில் பாலாஜி உறவினர்கள், நண்பர்கள், உதவியாளர்கள் எனத் தொடங்கி நடத்தி வரும் சோதனை தாக்குதல் அவரது அதிகாரப்பூர்வமான அரசு இல்லத்திலும், தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அலுவலகத்திற்கும் சென்றுள்ளது. “எந்த விசாரணைக்கும் ஒத்துழைக்க தயார்” என அவர் அறிவித்த நிலையிலும் சட்ட முறைகளை நிராகரித்து, மனித உரிமைகளை அலட்சியப்படுத்திய அமலாக்கத்துறையின் நடவடிக்கையால் அவரது உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டிய நிர்பந்தத்திற்கு நெட்டித் தள்ளப்பட்டுள்ளது.



அமைச்சர், உயிருக்குப் போராடி வரும் நிலையில் அவரது சட்டபூர்வ கடமைகளை கவனிக்கும் பொறுப்பை அமைச்சரவை உறுப்பினர்களிடம் முதலமைச்சர் பிரித்து வழங்கியுள்ளார். மக்கள் பிரதிநிதித்துவ ஆட்சி முறையில் முதலமைச்சர் நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் தர வேண்டியது ஆளுநரின் சட்டப்படியான கடமைப் பொறுப்பாகும். ஆனால் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு அரசுக்கு எதிராக அரசியலமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தும் வன்மத்துடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். தற்போது தமிழ்நாடு மக்களை தவறாக வழிநடத்தும் உள் நோக்கம் கொண்ட குறிப்புகளுடன் முதலமைச்சர் கடிதத்தை திருப்பி அனுப்பி உள்ளார். ஆளுநரின் அப்பட்டமான அதிகார அத்துமீறலையும், மலிவான அரசியல் நடவடிக்கையையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆர்.என்.ரவி ஆர்.எஸ்.எஸ். + பா.ஜ.க. ஆதரவு அரசியலை ஆளுநர் மாளிகையில் இருந்து நடத்துவதை தமிழ்நாடு வினாடிப் பொழுதும் அனுமதிக்காது என்பதை உணர வேண்டும் என எச்சரிக்கை செய்கிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.




திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி ஆர்.கே.பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை மீட்புப் பணிகள் துறை சார்பாக நடைபெற்ற ஆண்டிற்கான வருவாய் நாளில் ஜமாபந்தி நிறைவு நாள் கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 415 மனுக்கள் பெறப்பட்டு 200க்கும் மேற்பட்ட மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பட்டா மற்றும் ஜாதி சான்றிதழ் பெயர் மாற்றம் சான்றிதழில் பயனாளிகளுக்கு வழங்கினார் உடன் தனித்துணை ஆட்சியர் மதுசூதனன், வட்டாட்சியர் ரமேஷ்,தேர்தல் துறை வட்டாட்சியர் ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர் பெ.பழனி, சி.என். சண்முகம் ஒன்றிய குழு துணை தலைவர் ரஞ்சிதா, ஒன்றிய குழு துணைத் தலைவர் திலகவதிரமேஷ்பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் - இளைஞர் அணி சார்பாக

# கழக ஆட்சியின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு!



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கழக அரசு பொறுப் பேற்று இரண்டு ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், கழக அரசின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்த்திடும் வகையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கீழ்க்கண்ட இடங்களில் “திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம்” நடைபெற உள்ளது. அது சமயம் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் தெருமுனை பிரச்சார கூட்டத்தினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| நாள் நேரம் | ஒன்றியம் / ஏற்பாட்டாளர் | பேச்சாளர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 17.06.2023 மாலை 5.00 | பாலக்கோடு கிழக்கு K.R.C செல்வராஜ் | திருச்சி சேகர் | பாடி ஊராட்சி கண்ணுகாரம்பட்டி |
| 17.06.2023 மாலை 6.00 | பாப்பாரப்பட்டிபேரூர் சண்முகம் பேரூர் செயலாளர் | முரசொலி மூர்த்தி | பேருந்துநிலையம் |
| 17.06.2023 இரவு 7.00 | பென்னாகரம் வடக்கு ஜி.சபரிநாதன் ஒன்றிய செயலாளர் | முரசொலி மூர்த்தி | நாகதாசம்பட்டி |
| 18.06.2023 மாலை 5.00 | ஏரியூர் ஒன்றியம் என்.செல்வராஜ் ஒன்றிய செயலாளர் | திருச்சி சேகர் | கோடிஅள்ளி ஊராட்சி ஜக்கம்பட்டி |
| 18.06.2023 மாலை 6..00 | பென்னாகரம் தெற்கு மடம்.க.முருகேசன் ஒன்றிய செயலாளர் | காவேரிப்பட்டினம் இளையராஜா | அஞ்சேஅள்ளி ஊராட்சி பளிஞ்சரஅள்ளி |
| 18.06.2023 இரவு 7..00 | பென்னாகரம் பேரூர் வீரமணி பேரூர் செயலாளர் | காவேரிப்பட்டினம் இளையராஜா | கிருஷ்ணாபுரம் |
| 19.06.2023 மாலை 5.00 | நல்லம்பள்ளி மேற்கு ராஜகோபால் ஒன்றிய அமைப்பாளர் | இலயோலாராஜசேகர் | பண்டஅள்ளி ஊராட்சி பங்குநத்தம் |
| 19.06.2023 மாலை 6..00 | தருமபுரி மேற்கு ரமேஷ் ஒன்றிய அமைப்பாளர் | இலயோலாராஜசேகர் | அதகபாடி ஊராட்சி அதகபாடி |
| 19.06.2023 இரவு 7..00 | தருமபுரி நகரம் நாட்டான் மாது நகர செயலாளர் | இலயோலாராஜசேகர் | தருமபுரி நகரம் |
| 21.06.2023 மாலை 5.00 | நல்லம்பள்ளி கிழக்கு எ.எஸ்.சண்முகம் ஒன்றிய செயலாளர் | பசும்பொன். மு.ராமசந்திரன் | இலளிகம் ஊராட்சி இலளிகம் |
| 21.06.2023 மாலை 6.00 | நல்லம்பள்ளி மத்தியம் கே.பி.மல்லமுத்து ஒன்றிய செயலாளர் | பசும்பொன். மு.ராமசந்திரன் | பாளையம்புதூர் |

**தடங்கம் பெ.சுப்ரமணி**
செயலாளர்
தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க.